**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான

உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் எந்தவொரு ஆதனத்தினதும் நியாயமான பெறுமதி உண்மையானதாக அளவிடும் போது அதன் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு உள்வாங்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்கு 1980 ஆம் ஆண்டிலே பொறுப்பளிக்கப்பட்டிருந்த 48 ஏக்கர் நிலப்பரப்பு அந்த சொத்து அடையாளப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலே நிலவிய ரூபா 73,653,874 கிரயத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதனால் அந்த சொத்தின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படவில்லை. | பல்கலைக்கழகத்தினால் இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் கிரய மாதிரியின் படி ஆதனங்கள, பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களை அடையாளங் காணல் மற்றும் கணக்கிலிடுதல் இடம்பெறுகின்றது. | இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனத்தின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த தொகை மதிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையில் காணப்பட்ட இரசாயன பொருட்கள், எதிர்வினைகள், அறுவைச் சிகிட்சை கருவிகள், கதிர்வீச்சுப் போட்டோ பிரதி மற்றும் மருத்துவ எரிவாயு (Medical Gas) ஆகியன மொத்த மீதிகளில் இரட்டிப்பு கணக்கிடுதல் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் இடம்பெற்ற மருத்துவ விநியோகம் மொத்தம் ரூபா 44,228,143 வால் | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் மருத்துவ விநியோக செலவினங்களுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான பெறுமதியொன்றை நன்கொடை நீங்கலாக இலாப நட்டக் கணக்கிற்கு குறைவாக செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் தேறிய மிகைக்கு அல்லது தேறிய சொத்துக்களுக்கு எதிராக தாக்கமொன்று | சரியான கணக்கீட்டுத் தகவல்களை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதன்படி வருமானங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய வருமானங்கள் மற்றும் வைத்தியசாலை செலவு ரூபா 44,228,143 வீதம் குறைவாகவும் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் அரச நன்கொடைகள் அந்த அளவில் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் தென் மண்டபத்தில் இடம்பெற்ற ரூபா 4,976,791 ஆன மொத்தம் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டதன் காரணமாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ள தேறிய மிகை அந்த அளவில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான கணக்கீட்டுத் தகவல்களை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | கணனி பீடத்திற்காக மீளாய்வாண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,358,000 கிரயத்தினாலான 20 கணனிகளின் பெறுமதி கணனி திருத்த வேலைகளுக்கான செலவாக கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் அந்த அளவில் குறைவாகவும் அந்த கணனிகளின் வருடாந்த பெறுமானத்தேய்வு செலவினையும் கவனத்தில் கொள்ளுமிடத்து வருடத்தின் தேறிய மிகை ரூபா 3,813,250 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக இடம்பெற்றுள்ள பிழையாகும் எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கீட்டுத் தகவல்களை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் தென் வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ள காணியின் துண்டின் 1830 ஆம் இலக்க 56.6 ஹெக்டேயர் காணிப் பகுதியை அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 112,000,000 வுக்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதியை கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக | தென் வளாகத்தை தாபிக்கப்பட்டுள்ள 1830 ஆம் இலக்க காணித் தொகுதியின் மதிப்பீட்டுப் பெறுமதி அரசம திப்பீட்டுத் திணைக்களத்தினால் 2021.12.20 ஆம் திகதி செவனகல பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு | சரியான கணக்கீட்டுத் தகவல்களை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடைமுறையல்லாத சொத்துக்கள் அந்த அளவில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது தென் வளாகத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது 2022 ஆம் வருடத்திலேயாகும். அதனால் 2022 ஆம் ஆண்டில் கணக்கிலிடப்பட்டுள்ளது. | |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச்சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பெறுகைகள் | 144,758,724 | பல்கலைக்கழகத்தின் சுய நிதிசார் நிதியத்தின் 03 துறைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப் பட்டுள்ள மொத்தம் ரூபா 144,758,724 ஆன பெறுகைகள் வேலைகளுக்குரிய ஆவணங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை அதனால் பெறுகைகள் வேலைகளுக்கான கணக்காய்வின் போது திருப்திரகரமாக அவதானிப்புக்களை மேற்கொள்ள முடியாது போனது. | 2022 மார்ச் 28 ஆந் திகதிய கேட்கப்பட்டுள்ள பெறுகைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஆவணங்களும் கணக்காய்வு நடவடிக்கை களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் கேட்கப்பட்டுள்ள ஏனைய தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்காக தேவையான ஆவணங்கள், சம்பந்தமான மேலதிக விபரங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். | கணக்காய்வு வேலைகளுக்கான தேவையான தகவல்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கற்கைநெறி கட்டணத்தை காலத்திற்குள் அறவிடாததன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக காணப்பட்ட பாடநெறி கட்டண வருமானம் ரூபா 330,112,437 | கல்வியாண்டின் பாடநெறிக் கட்டணம் அனைத்து வருடங்களினதும் நவம்பர் 30 ஆந் திகதியில் செலுத்த வேண்டியதுடன் அத்தினத்தில் அட்டுறு வருமானங்கள் | நிலுவையாகவுள்ள பாடநெறிக் கட்டணத்தை காலத்திற்குள் அறவிடுவதற்கான முறைமையை |

| | | | |
|---|---|---|---|
| | ஆகும். அதில் ரூபா 140,003,399 தொகை 02 வருடத்திற்கும் 04 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்து நிலுவையாக காணப்பட்டதுடன் ரூபா 45,965,400 தொகை 04 வருடங்களுக்கு அதிக காலமாக நிலுவையாக காணப்பட்டது. | அடையாளங் காணப்படும். இருப்பினும் தொற்று நிலைமை மற்றும் பொருளாதார வசதியீனங்கள் காரணமாக உதவிக் காலமொன்று கோரப்பட்டிருப்பதுடன் நிலுவையாக காணப்படுகின்ற பாடநெறிக் கட்டணத்தை எதிர்வரும் வருடத்திலே அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | தாபிக்க வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தின் மூலம் உணவு மற்றும் வதிவிட வசதிகளை விநியோகிப்பதற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய கட்டணம் உரிய மாதத்தின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உணவு விநியோகத்திற்காக ரூபா 10,815,115 உம் வதிவிட வசதிகள் விநியோகத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 118,107 அறவிடப்பட வேண்டி காணப்பட்டதுடன் நிலுவையாக காணப்பட்ட காலம் 1 வருடத்திற்கும் 04 வருடங்களுக்கு இடையிலுமாகும். | நிலுவைத் தொகையில் அறவிட முடியாத ஐக்கிய அமெரிக்க டொலர் 7636 ஐ பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் அறவிடப்பட வேண்டிய பணத்தில் 65% 2022.06.22 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பணம் தாமதமின்றி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்குப் பிறகு நிலுவைத் தொகை ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வெளிநாட்டு செலாவணியாக பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பிணை முறியாளர்களின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய 76 பதவியணி உறுப்பினர்களினால் பிணை முறி நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 75,027,980 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் இந்த பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 58,750,000 ஆன 2018, 2019 | இந்தக் கடனை அறவிடுவதற்காக பல்கலைக்கழகம் உச்ச அளவிலான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. வழக்கு தொடரப்பட்டதன் பின்னர் வழக்குத் தீர்ப்பு வழங்கப்படும் வரை கடனை அறவிடுதல் தொடர்பாக நிறுவனத்திற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. | பிணைமுறி நிபந்தனைகள் மீறப்படுதல் உரிய காலத்திலேயே அடையாளப் படுத்தல், அது தொடர்பாக கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு களிலிருந்து நழுவிச் |

| | | |
|---|---|---|
| மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலே இடம்பெற்றிருந்த பிணைமுறி மீறப்படுத்தல்கள் 58 சந்தர்ப்பங்களில் காலத்திற்குள் அடையாளங் கண்டிருக்கவில்லை.<br><br>இந்த பிணைமுறி நிபந்தனைகள் மீறப்படுதல்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதனூடாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிட்டுக் கொள்ளுதல் திருப்திகரமான நிலையில் இடம்பெறவில்லை. | | செல்வதற்காக துரித சட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஒப்பந்த வேலைகள் 48 இற்குரிய ரூபா 14,660,162 ஆன ஒப்பந்த பிடிவைப்பு பணமொன்று காணப்பட்டதுடன் 04 வருடங்களுக்கு அதிகமான காலத்திலிருந்து தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | பிடிவைப்பு பணம் செயற்திட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் சான்றுறுதி மற்றும் சேவை விநியோகத்தரின் எழுத்துமூல வேண்டுகோளின் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றது. அதன்படி உரிமை கோரப்படாத மற்றும் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களை விட பழைமையான பிடிவைப்பு பணத்தை இனிவரும் காலங்களில் வருமானமாக அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குரிய பிடிவைப்பு பணம் தொடர்பாக நாளதுவரையாக்கப் பட்ட தகவல்கள் பேணப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரையின் 154(1) இன் உறுப்புரை 1 ஆவது துணை உறுப்புரை | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அடையாளப்படுத்தப் பட்டுள்ள மற்றும் தன்னுடைய பங்குகளில் நூற்றுக்கு ஐம்பது அல்லது அதற்கு அதிக சதவீதம் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றாக உள்ள கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு முழுமையான உரித்துடைய துணை கம்பனியின் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகளின் கணக்காய்வு தனியார் கணக்காய்வு கம்பனியொன்றுக்கு பொறுப்பளிக்கப் பட்டிருந்தது. | வருடாந்த கணக்காய்வு பரிசீலனையின் போது கேட்கப்பட்ட அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிப்பை சமர்ப்பிப்பதற்கு தடையொன்று இல்லையென்பதை அறியத் தருகின்றேன். | அரசியலமைப்பு உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு | நிதி முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சலின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குள் 06 நிலையான வைப்புக்களுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் 22,026,833 க்காக அல்லது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 1981 இன் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன சட்டத்தின் 4(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குறுங்கால முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவிற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 371(5) | வழங்கப்பட்ட முற்பணங்களை மீட்டுதல் குறித்த நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியை விட அதிகமாக தாமதிக்கப்படக் கூடாத போதிலும் 2013, 2015 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலே பல்வேறு விடயங்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ரூபா 13,690,732 முற்பணம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை மீட்டுதல் உரிய நிதிப் பிரமாணம் 371(5) க்கு இணங்க இடம்பெற வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 570 | பிரமாணத்தின் பிரகாரம் செயற்திட்ட நிதியத்தின் வைப்பு அந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்ட தினத்திலிருந்து 2 வருடங்களுக்குள் உரிமம் கோராவிட்டால் அவற்றை காலாவதியானதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிர்மாணிப்புக்குரிய நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகை ரூபா 42,169,291 ஆக காணப்பட்டதுடன் அந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டு 04 வருடங்களை விட அதிககாலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வைத்தியசாலை செயற்திட்டத்தில் முடிவுறுத்தப்படாத நிர்மாணப் பணிகள் மற்றும் காணப்படுகின்ற குறைபாடுகளுக்காக பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முடிவுறுத்தப்படாத நிர்மாணப் பணிகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின்னர் தீர்க்கப்படும். | 2 வருடங்களுக்கு உரிமம் கோரப்படா விட்டால் அவற்றை காலாவதியாக கருதி நிதிப் பெறுமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 71 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதவியை உருவாக்குவதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் முகாமைத்துவச் சபையின் தீர்மானமொன்றின் மூலம் மொட்ரொபாலிரன் | பதவியை உருவாக்குவதற்காக நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் விண்ணப்பங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக 2022.05.26 ஆந் திகதி | பதவியை உருவாக்கு வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கெம்பஸ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியின் மண்டப அதிபதி என்ற பெயரில் புதிய பதவியொன்றை உருவாக்கி 2021.10.01 ஆம் திகதி முதல் 2022.02.21 ஆம் திகதி வரை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மண்டப அதிபதி பதவிக்காக குறித்த நியமனத்தை ஏற்படுத்துவதற்கு 2021.07.12 ஆந் திகதி இடம்பெற்ற முகாமைத்துவச் சபை கூட்டுத்தின் போது அனுமதி வழங்கப்பட்டிருந்தது. செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு சம்பந்தமாக 2022.02.21 ஆந் திகதி இடம்பெற்ற 640 ஆவது முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரிகைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. | வேண்டியதுடன் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மற்றும் சம்பள கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 1988 இன் 27 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக திருத்தப்பட்ட 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டம் | மேற்குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் நிறுவுதலின் நோக்கத்தின் அடிப்படையில் கெடெட் உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர் களுக்காக அரச பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவத்திற்கு உரிய கல்விப் பிரிவுகளின் தொடர்புடைய கல்விக் கற்கை நெறி நடாத்துதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் தொடர்பாக இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் கெடெட் உத்தியோகத்தர் அல்லது அரச உத்தியோகத்தர்களற்ற தேசிய மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பணம் செலுத்தும் அடிப்படையில் பட்டம் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன் 2021 இன் கல்வி ஆண்டிற்காக அவ்வாறான 826 மாணவர்களுக்காக 27 பட்டக் கற்கை நெறிகள் | அரச பல்கலைக்கழக மொன்றாக முப்படைகளின் மற்றும் பொலிசின் அந்தந்த வருடத்திற்குரிய வெற்றிடங்களின் அடிப்படையில் பல்வேறு பட்டக் கற்கை நெறிகளுக்காக வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு முதலில் கெடெட் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதுடன் அதற்குபிறகு ஒவ்வொரு பட்டக் கற்கைநெறியின் மேலும் உச்ச நிலைமையினுள் வெற்றிடங்கள் காணப்படுமாயின் மாத்திரம் அதற்காக வெவ்வேறாக பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டு அதற்காக பணம் செலுத்தும் அடிப்படையில் பல்கலைக்கழக | 2018 மார்ச் 21 ஆந் திகதி இடம்பெற்ற பொது வியாபாரம் தொடர்பான நிறைவேற்று சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சட்டத்தின் திருத்த வேலைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. | தகுதியைப் பெற்றுள்ள மாணவர்களை ஆட்சேர்த்து மேற்குறித்த இடைவெளிக்கு இன்னொரு பகுதியினரை அரச பல்கலைக்கழக மொன்றாக நிரப்பப்படுகின்றது. கெடெட் உத்தியோகத்தர் களுக்கு மேலதிகமாக பணம் செலுத்தும் அடிப்படையில் மாணவர்களை உள்வாங்குவதற்காக காணப்படுகின்ற சட்டத்தின் ஏற்பாடுகளில் ஒரு சில குழப்பநிலை / தெளிவின்மைகள் காணப்படுவதுடன் அவற்றை மிகத் தெளிவாக குறிப்பிட்டு புதிய சட்ட வரைபொன்று பேணப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள து. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 95,630,017 மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 538,182,868 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 633,812,885 விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்காக வைத்தியசாலை வருமானம் விருத்தியடைதல், வட்டி வருமானம் விருத்தியடைதல் மற்றும் பல்வேறு வருமானங்கள் விருத்தியடைதல் பிரதான காரணங்களாகியிருந்தன.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முன்னேற்றப் பகுப்பாய்வு

(அ) 2020 வருடத்திற்கு இணையாக மீளாய்வாண்டிலே அனைத்து வருமானம் நூற்றுக்கு 21 விருத்தியொன்று காட்டப்பட்டதுடன் பிரதான வருமான விடயங்களின் முன்னேற்றங்கள் பின்வருமாறு உள்ளது.

| வருமானங்கள் | 2021 ஆம் ஆண்டு | 2020 ஆம் ஆண்டு | அதிகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மொத்த வருமானம் | 10,746,884,747 | 8,915,954,450 | 1,830,930,297 | 21 |
| வைத்தியசாலை வருமானம் | 472,359,607 | 130,852,639 | 341,506,968 | 261 |
| வட்டி வருமானம் | 726,274,095 | 286,414,511 | 439,859,584 | 154 |
| வேறு வருமானம் | 1,063,448,746 | 164,847,004 | 898,601,742 | 545 |

(ஆ) மீளாய்வாண்டின் மொத்தச் செலவு ரூபா 6,155.87 மில்லியனாக காணப்பட்டதுடன், முன்னைய வருடத்திற்கு இணையாக அந்த செலவு நூற்றுக்கு 36 ஆல் அப்படியில்லையென்றால் ரூபா 1,628 மில்லியன் விருத்தியடைந்து காணப்பட்டது. இந்த விருத்திக்காக தனிநபர் ஊதியம் மற்றும் வைத்தியசாலை செலவுகள் ஆகிய செலவுத் தொகுதியில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதான காரணமாயிருந்தது. பிரதான செலவு விடயங்களின் முன்னேற்றங்கள் பின்வருமாறு உள்ளது.

| செலவினங்கள் | 2021 ஆம் ஆண்டு | 2020 ஆம் ஆண்டு | அதிகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மொத்தச் செலவு | 10,651,254,730 | 9,454,137,318 | 1,197,117,412 | 13 |
| நிதிச் செலவு | 4,495,383,107 | 4,926,281,163 | -430,898,056 | -9 |
| ஆளணி வேதனங்கள் | 2,438,589,805 | 1,956,933,614 | 481,656,191 | 25 |
| வேறு நடைமுறைச் செலவு | 368,251,488 | 287,610,438 | 80,641,050 | 28 |
| வைத்தியசாலை செலவு | 941,862,265 | 72,288,867 | 869,573,398 | 1203 |
| பராமரிப்பு | 201,716,909 | 176,207,972 | 25,508,937 | 14 |
| பெறுமானத்தேய்வு செலவு | 1,442,180,785 | 1,288,130,870 | 154,049,915 | 12 |

(இ) மேலும் மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்தச் செலவில் நூற்றுக்கு 39.6 அவ்வாறென்றால் ரூபா 2,438 மில்லியன் ஆளணி வேதனங்கள் தாங்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அது பல்கலைக்கழகத்தின் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 22.6 ஆக இருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்தச் செலவில் நூற்றுக்கு 42 அவ்வாறென்றால் ரூபா 4,495 மில்லியன் கடன் கிரயத்திற்காக தாங்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அது பல்கலைக்கழகத்தின் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 43 ஆக இருந்தது. இந்தக் கடன் கிரயம் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி பிணையின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர 201.629 மில்லியன் கடன் தொகையின் காரணமாக ஏற்பட்டிருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) 2020 ஆம் ஆண்டிலே மறை 5.86 ஆக காணப்பட்ட உரிமை மூலதனம் மீதான திரும்பல் விகிதம் மீளாய்வாண்டிலே நேர் 1.09 வரையான விருத்தியடைந்து காணப்பட்டது.

(ஆ) 2020 ஆம் ஆண்டிலே 1.5:1 க்கு காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்களுக்கு நடைமுறை பொறுப்பு விகிதம் மீளாய்வாண்டிலே 3.2:1 வரை விருத்தியடைந்து காணப்பட்டது.

(இ) 2020 ஆம் ஆண்டிலே உரிமை மூலதனம் மீதான கடன் மூலதன விகிதம் 4.47:1 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிலே அந்த தேர்வு விகித நிலைமை மேலும் மாற்றமடையாமல் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் இறுதியாகும் போது தெற்கு மண்டபம் தாபிக்கப்பட்டு 07 வருடங்கள் கடந்திருந்தும் மண்டபத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த துண்டு இலக்கம் 1832 ஆன 5.1363 ஹெக்டயர் ஆன நிலப்பகுதியின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 7.6883 ஹெக்டயரான காணியை உரிமை மாற்றத்திற்கான வேலைகளும் நிறைவடைந்திருக்கவில்லை. | துண்டு இலக்கம் 1832 ஆன நிலப்பகுதி கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தெற்கு மண்டபத்திற்கு உரித்தாக்கியதன் பின்னர் பதுளை மதிப்பீட்டுப் பிரிவினால் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 7.6883 ஹெக்டயர் அளவான காணியின் உரிமை மாற்றத்திற்கான இறுதி நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை தாபிக்கப்பட்டுள்ள 21.5815 ஹெக்டயர் காணியின் சட்டரீதியான உரிமையை மீளாய்வாண்டு இறுதியிலும் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. அந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதனா வைத்தியசாலைக்குரிய கட்டிடங்களின் பெறுமதி ரூபா 31,101 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் நிலப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,216 மில்லியன் கிரயமும் தாங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு முடிவடையும் போது நிர்மாணங்கள் நிறைவு | பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை தாபிக்கப்பட்டுள்ள கெஸ்பேவ பிரதேச செயலாளர் கோட்டத்தில் வேறஹெரயில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு உரிய நிலப்பகுதியை உரித்தாக்கும் நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு 05 வருடங்களை விட அதிககாலம் கடந்திருந்தும் உரிய காணியை உரித்தாக்கும் வேலைகள் நிறைவடைந்திருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் இந்த காணியின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) போதனா வைத்தியசாலையின் கதிர் வீச்சுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வைத்திய உத்தியோகத்தர் மற்றும் கதிர்வீச்சு சிகிட்சையாளர் பதவி உட்பட 31 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதனால் மார்பகப் புற்றுநோயை அடையாளப்படுத்தும் பிரிவு (Breast Health Centre) மற்றும் அணுக்கதிர் வீச்சு வைத்தியச் சிகிட்சை பிரிவு (Nuclear Medicine) ஆகிய பிரிவுகளுக்கான சிகிட்சை சேவைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. அதனால் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வளாகமும், கொள்வனவு செய்யப்பட்டுள்ள மனைப் பொருட்கள் மற்றும் வைத்திய உபகரணங்கள் ஆக்கபூர்வமாக உபயோகப் படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | மார்பகப் புற்றுநோயை அடையாளப்படுத்தும் பிரிவு (Breast Health Centre) தாபிப்பதற்கான தேவையான Mammogram இயந்திரம் தாபிப்பதற்கு கதிர்வீச்சுப் பிரிவினுள் இடமொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் விசேட வைத்திய உத்தியோகத்தர்களின் அளவு இல்லாததன் காரணமாக இந்தப் பிரிவை ஆரம்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது வைத்தியசாலைக்குள் கதிர்வீச்சு சிகிட்சையாளர் விசேட வைத்தியர் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருப்பதுடன் வைத்தியசாலையின் ஏனைய கதிர்வீச்சு சிகிட்சையாளர்களின் தேவைகள் அனைத்தும் மிகவும் சிரமத்துடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதனால் கதிர்வீச்சு விசேட வைத்தியரின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய புதிய பிரிவை ஆரம்பிப்பதற்கு முடியாது உள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக உபயோகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பிரதான வாட் 03 உம் மற்றும் சுகாதார கல்விப் | பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு அனுமதி | வைத்திய சாலையின் |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு மற்றும் குடும்ப நலப் பிரிவு உள்ளடங்கலாக பல பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது செயற்படுத்தப்படாது காணப்பட்டதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | பெற்றுக் கொள்வதற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவுடன் 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் தேவையான பதவியணி பதவிகள் தயாரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக ஒவ்வொரு பதவிகளுக்கும் உரிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஊடாக ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பை மேற்கொள் வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதன் காரணமாக வெளிநோயாளர் பிரிவு 2017.12.15 ஆந் திகதி திறக்கப்பட்டது. | செயற்திறன் மிக்க செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | காந்தப் புலம்வாய்ந்த மீள் உருவ ஸ்கேனர் இயந்திரம் (MRI Scanner) 2017 திசெம்பர் 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்தும் பாவனைக்குட்படுத்துதல் 21 மாத கால தாமதத்தின் பின்னர் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்தினத்திலிருந்து 2021 ஒக்தோபர் மாதம் வரையான காலத்திற்குள் இயந்திரத்தின் சாதாரண மாதாந்தப் பரிசீலனைப் பாவனை 21 இற்கும் 52 இற்கும் இடையிலான கீழ் மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, CT Scanner இயந்திரம் SLICE Computed Tomography) 2018 சனவரி 31 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்த போதிலும் பாவனை 2018 யூன் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சாதாரனமாக மாதாந்த பாவனை பரிசீலனை 22 க்கும் 192க்கும் | கதிர்வீச்சு திணைக்களத்தின் கதிர்வீச்சு சிகிட்சையாளர் (பிணி தீர்மானம்) - விசேட வகுப்பு கதிர்வீச்சு சிகிச்சையாளர் (சிகிச்சையாளர்) - விசேட வகுப்பு மற்றும் கதிர்வீச்சு சிகிச்சையாளர் (சிகிச்சையாளர்) ஆகிய பதவிகளுக்காக பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு சிரமமாக உள்ளது. இருப்பினும் தற்போது பல்கலைக்கழக வைத்தியசாலையின் மொத்த இயலுமையில் 50 சதவீத அளவானவை செயற்படுத்தப்படுவதுடன் பல்கலைக்கழகத்தின் சுகாதார விஞ்ஞான கல்வி பீடத்தின் ஒப்பந்த அடிப்படையிலான 21 கதிர்வீச்சு சிகிட்சையாளர்கள் மற்றும் வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்படுவதுடன் கதிர்வீச்சு திணைக்களத்தினால் பொதுமக்களுக்கு செயற்திறனான சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேலும் | உபகரணத்தின் செயற்திறன்களை உபயோகப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடையிலான கீழ் மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. புதவியணியினர் வெற்றிடம் காணப்படுதல் இந்த இயந்திரத்தை உச்ச அளவில் பாவனைக்குறப்படுத்துவதில் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. | தெரிவித்துக் கொள்கின்றேன். | |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 இன் படி மற்றும் விலைக்கேள்விப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த பெறுமதியில் நூற்றுக்கு 10 செயலாற்றல் பிணைக் காப்பொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக்கேள்விப் பிணைக் காப்பின் பெறுமதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 2 ஐ விட குறைந்த பெறுமதி என்பது அவதானிக்கப்பட்டது. | இந்தக் கொள்வனவுகள் மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெறுவதுடன் கொள்வனவு செய்யப்படுகின்றவர்களின் எண்ணிக்கையை உறுதியாக குறிப்பிட முடியாது. அதனால அண்ணளவாக குறிப்பிட்டு செயலாற்றல் பிணைக் காப்பின் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. | போதுமானளவு செயலாற்றல் பிணைக் காப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விநியோகத்தர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் விபரக் குறிப்பு மாற்றப்படுவதனால் i3 கணனிக்காக விலைமனுக்கோரல் சமர்ப்பிக்க முடியுமான போது மனுதாரர்களுக்கு பெறுகைக்கு பங்குபற்றுவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் தவறியிருந்துதுடன் அதன் காரணமாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) இன் பிரகாரம் தகுதியுடைய விருப்பத்தை வெளிக்காட்டக் கூடிய தரப்பினருக்கு பெறுகைகளில் பங்குபற்றுதலுக்கான சாதாரண, | விநியோகத்தர் சமர்ப்பித்த i3 விபரக் குறிப்பிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் போது i5, i3 ஆக திருத்தம் செய்யப்பட்ட போதும் ஏனைய அத்தியாவசியமான விபரக் குறிப்புகளிலே மாற்றம் இல்லாதிருந்ததுடன் நிலவுகின்ற வியாபாரச் சந்தை நிலைமைகளின் பிரகாரம், விலைகள் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 1.2.1(இ) இன் பிரகாரம் தகுதியுடைய விருப்பத்தை வெளிக்காட்டக் கூடிய தரப்பினருக்கு பெறுகையில் பங்குபற்று தலுக்கான சாதாரண, சமமான உச்ச சந்தர்ப்பத்தை பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | சமமான உச்ச சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல் எனும் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சாதாரணமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்துள்ளது. | கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2.14.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகம் 35 இன் பிரகாரம் சந்தை விலையிடும் முறை பின்பற்றுகின்ற சந்தர்ப்பங்களில் குறைந்தளவு விலைமனுதாரர்கள் மூன்று பேராவது மதிப்பீட்டிற்காக ஈடுபடுத்தும் வகையில் விலை மனுகக் கோரப்பட வேண்டிய போதிலும் மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியின் மண்டப அதிபதிக்காக வாடகை அடிப்படையில் வாகனமொன்றை பெறுகைக்குட்படுத்து வதற்காக விநியோகத்தர் இருவர் மாத்திரம் சமர்ப்பித்துள்ள விலைமனு பார்க்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள 61 விநியோகத்தர்களிடமிருந்து இலத்திரனியல் தபால் மூலம் விலைமனு கோரப்பட்டிருப்பதாக அறிக்கைப்படுத்தப் பட்டிருந்த போதிலும் விலைமனுப்படிவம் அந்த விநியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்றதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே, தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர் அமைச்சின் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர் அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | இந்தப் பெறுகைகள் விடயங்களில் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக விலை மனுகோரல் பத்திரம் பல்கலைக்கழகத்தின் வெப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. விநியோகத்தர் இருவர் மாத்திரம் விலை மனு கோரப்பட்டிருப்பதுடன் குறைந்த விலைமனு தெரிவு செய்யப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2.14.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகம் 35 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |